# நிலுவையில் உள்ள பற்றுகளை முழுவதுமாக தீர்த்துக் கொள்ள ஒப்பப்புள்ளிகளை கோருதல்

# INVITATION FOR BIDS FOR SETTLEMENT OF THE OUTSTANDING DEBT

கோஸ்ட்டல் எனர்ஜென் பிரைவேட் லிமிடெட் (''**நிறுவனம்**''), தற்போது தமிழ்நாட்டில் தூத்துக்குடியில் 1200 MW (2 X 600 MW) நிலக்கரி அடிப்படையிலான அனல் மின் நிலையத்தை (''**செயல்திட்டம்**'') இயக்கி வருகிறது.

நிறுவனத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை தீர்ப்பதற்காக, பாரத ஸ்டேட் வங்கியின் தலைமையிலான கடன் வழங்கியோர் கூட்டமைப்பானது, (''**கடன் வழங்கியோர்**'') கடன் வழங்கியவர்களுக்கு நிறுவனமானது அடைக்க வேண்டிய அனைத்து கடன்களுக்காக உரிய முழுவதுமான மற்றும் இறுதியான தீர்வை அடைவதற்கு ஏதுவாக, கடன் வழங்கியோருக்கு அனைத்து பற்றுத் தொகைகளையும் முழுமையாக மற்றும் இறுதியாக தீர்த்திடுவதற்காக ஒப்பப் புள்ளிகளை கோருவதற்காக, ஸ்விஸ் சாலஞ்ச் வழிமுறை அடிப்படையில் ஒப்பப்புள்ளி செயல்முறையைப் (''**ஒப்பப்புள்ளி நடைமுறை**'') பின்பற்ற முடிவு செய்தது.

இந்த விஷயத்தில், கடன் வழங்கியோர் ஒப்பப் புள்ளி நடைமுறை மற்றும் அது சார்ந்த விஷயங்களில் அவர்களுக்கு உதவிட மற்றும் ஆலோசனை கூற எஸ்பிஐ கேபிடல் மார்க்கெட்ஸ் லிமிடெட்டை **("SBICAPS")** நியமித்துள்ளனர்.

இதற்கேற்ப, கடன் வழங்கியோர் சார்பாக செயல்படும் எஸ்பிஐ கேபிடல் மார்க்கெட் லிமிடெட் மற்றும் பாரத ஸ்டேட் வங்கி 2019 நவம்பர் 20ம் தேதியன்று பிசினஸ் ஸ்டாண்டர்டு இதழில் வெளியான விளம்பரத்தை மற்றும் 2019 நவம்பர் 21ம் தேதியன்று தினத்தந்தியில் வெளியான விளம்பரத்தை (''**விளம்பரம்**'') தொடர்ந்து ஒப்பப் புள்ளி செயல்முறையில் பங்கேற்க போதிய திறன்களை தங்கள் வசம் கொண்டுள்ள பாடி கார்பொரேட், நிதி அமைப்பு, தனியார் ஈக்விட்டி முதலீட்டாளர், அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி உட்பட மற்றும் இவைதான் என்ற வரம்பின்றி முதலீட்டாளர்கள்/முதலீட்டாளர்களின் கூட்டமைப்பிடம் (''**பங்கேற்பாளர்கள்**'') இருந்து வரைவை சமர்ப்பிக்க (''**ஒவ்வொரு ஒப்பப் புள்ளி**'') கோரியுள்ளது.

விளம்பரம் மற்றும் ஒப்பப் புள்ளியில் ஒரு பகுதி மாற்றமாக, பங்கேற்பாளர்களால் ஒப்பப் புள்ளிகள் சமர்ப்பித்தலுக்கான நிர்ணயிக்கப்பட்ட கடைசி தேதி 2019 டிசம்பர் 6 ஆம் தேதி அன்று 14.00 மணி என்ற நேரம் 2019 டிசம்பர் 20 ஆம் தேதி அன்று 14.00 மணி அல்லது அதற்கு முன்பு என நீட்டிக்கப்பட்டுள்ளது என்பதை பங்கேற்பாளர்கள் தயவுசெய்து கவனிக்க வேண்டுகிறோம்.

ஒப்பப் புள்ளி செயல்முறை சம்பந்தமாக அனைத்து அண்மை செய்திகள், மாறுபாடுகள், அறிவிப்புகள், திருத்தங்கள் மற்றும் இதர தகவல்களுக்கு தயவுசெய்து தொடர்ந்து எங்களின் இணையதளங்களைப் (https://www.sbicaps.com/index.php/whats-new/ or www.sbi.co.in) பாருங்கள்.

| தொடர்பு கொள்ள வேண்டிய அதிகாரிகள் | தொலைபேசி எண் | மின்னஞ்சல் |
|---|---|---|
| திரு. அஜய்குமார் சிங்<br>(AGM SBI) | +91 22 6824 7650 | agm1infra1.sarg@sbi.co.in |
| திருமதி. ராஜ்ராஜேஸ்வரி மிஸ்ரா அவர்கள்<br>(VP, SBICAPS) | +91 22 2217 8313 | rajrajeswari.mishra@sbicaps.com |

SBI

SBI Capital Markets Limited

*குறிப்பு: இந்த விளம்பரம், SBICAPS அல்லது கடன் கொடுத்தவர்கள் சார்பாக எந்த விதமான உறுதிமொழி ஆகாது மற்றும் உறுதிமொழியாக கருதப்படாது. SBICAPS மற்றும் கடன் கொடுத்தவர்களுக்கு, செயல்முறையிலிருந்தும் அல்லது அதன் எந்தவொரு பகுதியிலிருந்தும் விலகிக் கொள்ளும்/தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் / ரத்து செய்யும், செயல்முறையின் எந்த கட்டத்திலும் எந்தவொரு / அனைத்து விண்ணப்பத்தை (விண்ணப்பங்களை) பெற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் மற்றும் / அல்லது செயல்முறையை அல்லது அதன் எந்த பகுதியையும் மாற்றியமைக்கும் அல்லது எந்தவொரு விதியையும் எந்தவொரு காரணமுமின்றி, எந்தவித கட்டுபாடுமின்றி மாற்றும் உரிமை உள்ளது. இது ஒரு ஆஃபர் டாகுமென்ட் அல்ல. இந்த விளம்பரம், ஒப்பப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி உரிமைத் துறப்புகள் மற்றும் வரம்புகளுக்கு உட்பட்டது.*

English 11(W) x 12(H) cm